மலர்-2 இதழ்-10

தை - 1992

# மக்கள் மன்றம்

குடியரசு தினச் சிந்தனைகள்

## சபாஷ் அபாஷ்

இந்தியக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டம் 1949-ம் ஆண்டு நவம்பர் 26-ம் நாள் நிறைவேற்றப்பட்டது. கடந்த நாற்பத்து மூன்றாண்டுகளாக ஜனவரி 26-ம் நாள் நமது குடியரசுதின நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

நமது குடியரசுப் பெயர்: இறைமையும், மதச்சார்பின்மையும் ஜனநாயகமும் கொண்ட குடியரசு என்பதாகும்,

**இதன் நோக்கம்**
சமுதாய, பொருளாதார, **அரசியல் நீதியும்**
எண்ணங்களும், அவற்றை வெளியிடுவதற்கும்,
நம்பிக்கை, கொள்கை, வழிபாடு ஆகியவற்றை
மேற்கொள்வதற்கும்
**சுதந்திரமும்**
சுய அந்தஸ்து, வாய்ப்புகள் ஆகியவற்றில்
**சமத்துவமும்**
எல்லா மனிதரிடையேயும்
சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கும்,
ஒவ்வொரு குடிமகனின்
தன்மானத்தை உறுதி செய்வதற்கும்
உருவாக்கப்பட்டதே
இந்திய சமத்துவ, ஜனநாயகக் குடியரசாகும்.

இனிமையான இலட்சியங்கள்.

ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் இந்த இலட்சியங்களை எவ்வளவு நிறைவேற்றி இருக்கிறோம் என்று நாம் அளவிட்டுக் கொள்கிறோம்.

இந்த 43-வது குடியரசு தினத்தன்று ஒற்றுமை யாத்திரை சென்றவர்கள் பஞ்சாபில் கொலை செய்யப்பட்டார்கள். காஸ்மீரில் தலை நகருக்குள் இந்த யாத்திரிகர்கள் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டார்கள்.

ஓரின மொழி, ஒருமத கோஷங்கள் ஒலிக்கின்றன.

சமத்துவமெங்கே? சகோதரத்துவமெங்கே?

கோத்தகிரியில் மக்கள் மறுவாழ்வு மன்ற மாநாட்டுப் பொதுக் கூட்டத்திற்கு போலீஸ் அனுமதி மறுக்கப்பட்டது. ஊர்வலம் அனுமதிக்கப்படவில்லை.

கூட்டம் கூடவும், கருத்துக்களைக்கூறவும் நமக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைப் பறித்த சதிகாரர்கள் யார்? ஏன் அவ்வாறு நியாயமற்ற செயல்களைச் செய்தார்கள்?

கொணவக்கரையில் இருக்கஇடமின்றிதரிசு நிலத்தில் குடிசைகள் போட்ட குடும்பங்களைச் சிறைப்படுத்தி, அவர்களைத்தாக்கி அவர்கள் குடிசைகளைத் தகர்த்தெறிந்து கொக்கரித்தது மாவட்ட ஆட்சி.

குடியரசுத் தினப் பரிசா இது?

இந்தப் பாரதப் புத்திரர்களை சிறைப்படுத்திய அதிகாரிகளும் குடியரசுதின விழாகொண்டாடி இருப்பார்கள். ஒவ்வொரு இந்தியனின் தன்மானத்தை உறுதி செய்யும் செயலா இது? அல்லது காட்டுமிராண்டித்தனமா? இந்தக் கொடுமைகளை உருவாக்கத்தானா நமது குடியரசு உதயமானது?

இப்படி மக்களை ஏமாற்றவும், வஞ்சிக்கவும் கொடுமைப்படுத்துவதுமே இந்திய அரசியல் வாதி

இரண்டாம் ஆண்டுச் சிறப்பிதழ்

**சபாஷ் அபாஷ் . . . . .**

னதும். ஆட்சியாளர்களினதும் நாளாந்த நடவடிக்கை ஆகிவிட்டது என்று தனது ஐ.ஏ.எஸ். பதவியை உதறித் தள்ளி இருக்கிறார் ஓர் உத்தம அதிகாரி. அப்படிப்பட்டவர்கள் நீலகிரியில் இல்லை, என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும்.

பீகார் மாநிலத்தில் அபாஷ் குமார் சட்டர்ஜி என்ற மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி 'இந்தப் பிற்போக்கு அமைப்பில்' நான் அங்கம் வகிக்க விரும்பவில்லை, என்று பதவியை உதறித் தள்ளியிருக்கிறார். பதவி விலகல் கடிதத்தில் பல நல்ல கருத்துக்களை ஆணித்தரமாக மொழிந்திருக்கிறார். அவற்றில் ஒன்று அதிகாரத் துஷ்பிரயோகம் பற்றியது.

> நமது நாட்டில் இன்று அரசியல் அதிகாரம் படுமோசமாக துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. பொது வாழ்வில் எல்லாப்பண்புகளும் அப்பட்டமாக சீரழிக்கப்படுகின்றன. தேசிய நலன்களை இலகுவில் விட்டுக் கொடுத்து விடுகிறோம், சமுதாய ஒற்றுமையையும், இணக்கத்தையும் குலைக்கிறோம். நாட்டின் ஒருமைப்பாட்டை பலியிட்டு வருகிறோம். இதனால் நமது நாட்டை அழுகிய குட்டையாய் அசுத்த சாக்கடையாய், துன்பத்தின் உறைவிடமாய் குன்றாத இருளகமாக சீரழித்துவிட்டோம், என்று கூறியிருக்கிறார்.

ஐ.ஏ.எஸ் அதிகாரம் அவர் கண்களை குருடாக்கி விடவில்லை, ஐ.ஏ.எஸ் அதிகாரம் அவரது இதயத்தை கல்லாக்கி விடவில்லை. மக்கள் நலனில் அக்கறை கொண்ட அதிகாரி என்ற காரணத்தினால் பதவி பெரிதல்ல பண்பே பெரிதென்று தமது பதவியை வீசி எறிந்திருக்கிறார்.

இவரை நினைவில் கொண்டு நீலகிரியை நோக்கினால்? நிச்சயம் அபாஷுக்கு சபாஷ் சொல்ல வேண்டும்.

---

## கோத்தகிரியில் குதூகல மன்ற மாநாடு

மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தின் ஏழாவது ஆண்டு விழா ஜனவரி மாதம் 4, 5, 6, ஆகிய தேதிகளில் கோத்தகிரி மன்ற வளாகத்தில் நடைபெற்றது

முதல் நாளன்று ''நம்பிக்கை இழந்த குழந்தைகள்'' என்ற தலைப்பில் குழந்தைகள் பற்றிய ஒரு கண்காட்சி நடைபெற்றது இக்கண்காட்சியை ஐலண்ட் அறக்கட்டளையின் அறங்காவலர் திரு. ஏ. டி. அல்போன்சஸ் திறந்து வைத்தார். இக்கண்காட்சியில் குழந்தைத் தொழிலாளர்கள். வறுமையில் வாடும் குழந்தைகள், கல்வியறிவற்ற குழந்தைகள் போன்ற குழந்தைகள் பற்றிய கண்காட்சிகளும்' புகைப்படங்களும், பல புள்ளி விவரங்களும் இடம் பெற்றிருந்தன.

முதல் நாள் பிற்பகல் மாதர் மாதர் மாநாடும் தொண்டர் அணியினரின் வருடாந்த மாநாடும் இடம் பெற்றது.

இரண்டாம் நிகழ்ச்சி பொதுச் செயலர் திரு. இர. சிவலிங்கம் அவர்களின் ஆண்டறிக்கை சமர்பித்தலுடன் ஆரம்பமாயிற்று. தொடர்ந்து திரு. எம். சந்திரசேகரன் திரு. பா. செபாஸ்தியன் திரு. சே. சாந்தகிருஷ்ணன் ஆகியோர் முறையே கூடலூர், கோத்தகிரி, குன்னூர் பிராந்திய அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். இரண்டாம் நாள் பிற்பகல், மூன்று பிராந்தியங்களுக்குமான புத்தாண்டுத் திட்டமும் பொது வேலைத் திட்டமும் சமர்ப்பிக்கப் பட்டது மாநாட்டுத்தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன (தீர்மானங்கள் இவ்விதழில் 5-ம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளன)

அதனைத் தொடர்ந்து நம் மக்கள் துயர் துடைக்க, சிறை சென்ற பதின்மூன்று செம்மல்களும் பாராட்டப்பட்டு பொன்னாடைப்போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர் கோவையைச் சேர்ந்த திருமதி. சிங்கைதங்கம், வழக்கறிஞர் திரு. வி. பி. சாரதி திரு சீ. ஆர். பிஜோய், டெக்ராஸ் நிர்வாக இயக்குனர் அருட்தந்தை ஜேக்கப் பெள்ளி ஆகியோர் சிறப்புரையாற்றினர்

அன்று மாலை கவியரங்கம், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. கவிஞர், வீரா பாலசந்திரன் தலைமையில் ''சிந்தைக்கு நீங்கள் சிறையிடலாமோ'' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் இளங்கவிஞர் பத்துபேர் கலந்து கொண்டனர்.

மூன்றாம் நாள், நடந்த விழாவிலே, மன்ற பொதுச் செயலர் திரு. இர. சிவலிங்கம், கவிஞர் சேவற்கொடியோன், திருமதி. உமா மகேஸ்வரி, திரு இரா. வெள்ளிங்கிரி, திரு. ஏ. சீ. தீன், ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழாவிற்கு திரு. எஸ். திருச்செந்தூரன் தலைமை வகித்தார். மன்ற உறுப்பினர்கள் பலரும் மன்ற வளர்ச்சி, எதிர்காலம் என்பன பற்றி கருத்துரை வழங்கினர்.

---

### சிலவரியில் பல பணிகள்

⁂ கூடலூரில் 9-2-92 அன்று மலையக மாணவர் மன்றத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

⁂ கோத்தகிரி பாண்டிய நகர், வெற்றி நகர் ஆகிய இடங்களில் மலையக மாதர் முன்னணியின் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

**பாகம் 11**

# நீலகிரிச் சாரலிலே

## புலியும் கிலியும்

**- சேயோன் -**

(நமது பத்தாம் பாகத்தை சிறிது வித்தியாசமாக எழுதினோம். அதற்குப்பிறகு எழுதும் சந்தர்ப்பங்கள் அருகிவிட்டன. வாசக நண்பர்கள் மீண்டும் எழுதுமாறு தூண்டியிருப்பதால் நமது தொடர், தொடர்கிறது. இருந்தாலும் எங்களை வரலாற்று நோக்கிலிருந்து மாற்றி நிகழ்கால நிகழ்ச்சிகளைப் பற்றித்தான் எழுத வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இன்றைய நிகழ்ச்சிகள் தான் நாளைய வரலாறு படைக்கின்றன. ஆகவே நமது தொடர் நிகழும் சம்பவங்களின் நிகண்டாகவே தொடரும். - சேயோன்)

கோவையிலிருந்து கோத்தகிரி செல்லும் பொழுது வளைந்து, நெளிந்து செல்லும் பாதையில் தூக்கி அடித்து நமது மூட்டுக்களின் பலத்தை பரிசோதிக்கும் பஸ் பயணத்தில் பத்திரிக்கை படிப்பது ஒரு அசாத்திய சாதனை. என்றாலும் பத்திரிக்கை படிக்கும் ஆர்வத்தில் ஒரு பரதநாட்டியமே ஆடி பக்குவமாக பத்திரிக்கையை படிக்க பக்கங்களைப்புரட்டி சிறிய எழுத்தில் கோர்க்கப்பட்டிருக்கும் செய்திகளை கண்ணுள் பதித்து, கருத்தில் செலுத்தி காலத்தை கழித்துக்கொண்டிருக்கும் வேளையில் நம்மை கதிகலங்கச் செய்து, பத்திரிக்கைகள் படபடத்து காற்றில் பறக்க, நமது கண்கள் கிறங்கி சுழன்று கருத்தை கனவில் செலுத்திய இரு செய்தித்துணுக்குகள் இதயத்தை துளைத்தன.

...

அது இந்துப்பத்திரிக்கை. நாடறிந்த புகழ் பெற்ற ஆங்கிலப் பத்திரிக்கை, தேசியப்பத்திரிக்கை. எல்லா கருத்துக்களுக்கும் அதில் இடமுண்டு. உண்மையைத்தான் அதில் வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கை புலரிடம் உண்டு. இந்துவில் வெளிவந்தால் அது உண்மையாகத்தான் இருக்கும் என்று பொதுவாக அபிப்பிராயப்படுவார்கள். ஒரு காலத்தில் இந்து பத்திரிகை முதல் பக்கத்தில் விளம்பரங்களையே தாங்கி வரும். இப்பொழுதெல்லாம் பளிச் சென்று பிரகாசமான முக்த்தோடு இந்து நமக்கு காலை தரிசனம் தருகிறது. வானொலியில் செய்திகள் வாசிக்கப்படுவதற்கு ஒரு மணிநேரத்திற்கும் முன்னரே நமது வாயிலில் வந்து விழுந்திருக்கும் அத்தனை செய்திகளும், சற்று விஸ்தாரமாகவே வந்திருக்கும் இப்பொழுது இந்துவில் முற்போக்கு செய்திகள், தலித் செய்திகள் என்று பரந்த ஒரு பார்வையில் பத்திரிகா தர்மம் பவனி வருகிறது. ஆனால் உண்மைகள் மட்டும் வெளியிடுவது என்பது அத்தனை எளிதான செயலா'

பொய்மை பரப்புவதையே தமது தொழிலாகக்கொண்ட பல சக்திகள் இயங்குகின்ற உலகத்தில் சமூகத்தில் நம்மை அறியாமலேயே பொய்மைகள் புகுந்து விடுகின்றன. பொய்மையை உண்மையாகவே காட்டும் கலைகள் இப்போது மிகவும் வளர்ச்சியடைந்துள்ளன. 'INFORMATION' அதாவது தகவல் தருவதே ஒரு பத்திரிக்கையின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். அதே சமயத்தில் இன்றைய சமுதாயத்தில் 'DISFORMATION' அதாவது மாற்றுத்தகவல்கள் தருவதே சிலரின் கைவந்த கலையாகும்.

21 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் படிக்கும பத்திரிக்கையாக இந்துவேதன்னை விளம்பரப்படுத்திக்கொள்கிறது. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒருபத்திரிக்கை தெரிந்தோ தெரியாமலோ, ஒரு தப்புச்செய்தியை வெளியிடுமானால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமல்லவா?. அல்லது இந்துவுக்கு தெரியாமலேயே அதன் நிருபர்கள் தமது சொந்த சரக்கை அவிழ்த்து விடலாம் அல்லவா?. இந்த நிருபர்கள் அனைவரும் நிறைந்த அறிவுடையவர்கள். நடுநிலை வகிப்பவர்கள் என்று நாம் ஒத்துக்கொள்ள முடியாது. சிலர் தமது அரசியல் விசமங்களை தமது 'செய்திகளாக' வெளியிடலாம் அல்லவா?.

சில இடங்களில் இத்தகைய தவறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. உதாரணமாக இனவாதசூழ்நிலைகளில் சிலநிருபர்கள் ஒரு-தலை-பட்சமாக செய்திகளை வெளிடலாம். தாம் சார்ந்துள்ள இனத்திற்கு அனுகூலமானசெய்திகளை வெளியிடலாம். போர்காலங்களில் பத்திரிக்கை நிருபர்கள் தமது நாட்டிற்கு சாதகமான வகையிலேயே செய்திகளை தருவார்கள். அண்மையில் நடந்த ஈராக்-அமெரிக்க--குவைத் போரில் மக்கள் மட்டும் இறக்கவில்லை உண்மையும் இறந்து விட்டது என்று பல அறிஞர்கள் வருந்தினார்கள். அந்த வகையில் செய்திகள் திரிபு படுத்தி வழங்கப்பட்டன.

ஐரோப்பிய பத்திரிக்கைகள் மூன்றாம் உலக நாடுகளைப்பற்றி சரியான செய்திகளை தருவதில்லை ஆதலால், மூன்றாம் உலக நாடுகள் தமக்கென செய்தி தொடர்பு நிறுவனங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென நடுநிலைநாடுகள் மாநாட்டில் தீர்க்கமான முடிவெடுக்கப்பட்டது. ஆகவே இன்றய உலகில் உண்மை எது? பொய் எது? என்று அறிந்துகொள்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது:அதனால் தான் ஓரிரு பத்திரிக்கைகளை முன்மாதிரியாக கொண்டு இந்தப் பத்திரிக்கைகளில் பொய்ச்செய்திகள் வராது என்று ஒரு பொது அபிப்பராயத்தை ஏற்படுத்திக் கொண்டு, அறிவுடையோர் இந்த பத்திரிக்கைகளையே அதிகமாக வாசிக்கிறார்கள். அப்படிப்பட்ட பத்திரிக்கைகளுக்கு மிகப்பெரிய தார்மீக பொறுப்புண்டு.

இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம்

இவற்றையெல்லாம் மீறி உண்மை மக்கள் நலன், தேசியப்பற்று, நடுநிலைமை என்ற உயரிய பண்புகள் கொண்ட நிருபர்களும், பத்திரிக்கைகளும் இல்லாமலில்லை.

ஆனால் நீலகிரியில் நிரந்தரமாக குடியேறிவிட்ட இந்திய தமிழர்களை 'இலங்கை தமிழர்கள்' என்று தொடர்ந்து வர்ணிக்கும் நிருபர்கள் ஏராளம். இது விஷமமா? அறியாமையா? இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டால் இரண்டுத்தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று செய்தி வெளியிடும் பத்திரிக்கைகள் பற்றி என்ன நினைப்பது?. இந்து பத்திரிக்கையில் கூட அண்மையில் கன்னடியர்கள் தாக்கப்பட்டதையொட்டி '' சிங்களவர்கள் கைது செய்யப்பட்டார்கள்'' என்று செய்தி வந்தது நீலகிரியில் சிங்களவர்கள் இல்லை, இலங்கை தமிழர்களும் இல்லை என்ற உண்மையை ஏன் இந்த பத்திரிக்கைகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை?. அல்லது இப்படி பொய் செய்திகளை வெளியிடுவதுதான் 'சென்சேசன்' என்று நினைக்கிறார்களா?

இந்த வரிசையில் எமது இதயத்தை துளைத்த இரண்டு இந்து செய்திகளை சேர்த்துக்கொள்ளலாம் ஜனவரி 24ம் தேதி இந்து பத்திரிக்கையிலே இரண்டு கோத்தகிரியை சார்ந்த இளைஞர்கள் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற கலெக்டரின் பத்திரிக்கை குறிப்பு, செய்தியாக வந்திருக்கிறது. கர்நாடகத்தில் கோடிக்கணக்காக தமிழர்களில் சொத்துக்களை வீடுகளை, வாகனங்களை, வயல்களை, ஆலைகளை சூறையாடிய வன்முறைக் கும்பலில் எவரேனும் குண்டர்கள் சட்டத்தில் கைது செய்யப்படவில்லை. ஆனால் கோத்தகிரியில் மட்டும் ஒரு கன்னட முதலாளியின் கார்களுக்கு தீ மூட்டியதாக சந்தேகிக்கப்படும் இரு இளைஞர்கள் மட்டும் குண்டர்களின் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியை, போலீஸ் அல்ல கலெக்டரே பத்திரிக்கை குறிப்பாக கொடுத்திருக்கிறார் என்றால் இந்த செயல் அந்த கலெக்டரையே காட்டிக் கொடுக்கிறது. அதுவும் 'தினத்தந்தி' பத்திரிக்கையில் இந்த இளைஞர்களும் இலங்கைதமிழர்கள் என்று சிறப்பு வர்ணனை செய்து செய்தி வெளியிட்டிருப்பதும் இந்த கலெக்டரின் 'இன்ஸ்பிரேசன்' தானோ?.

அந்த செய்திதான் அப்பட்டமான பொய். கலெக்டருக்கு பயமுறுத்தல் அஞ்சலட்டைகளும் கடிதங்களும் வந்திருக்கின்றனவாம். அதுவும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களிடமிருந்து வந்திருக்கிறதாம் அதிலும் பி.மணிஹட்டி என்ற ஊரிலுள்ள ஒரு பெண்மணி தனது பெயரையும், முகவரியையும் எழுதி கலெக்டர் அம்மாவை எச்சரித்துள்ளாராம் அதாவது ஜனவரி 30.ம் தேதி கலெக்டர் அலுவலகத்திலும் ஒரு குண்டு வெடிக்குமாமம்.

இந்த செய்தியின் சிருஷ்டிகர்த்தா யாரென்று தெரியவில்லை. ஆனால் யாரோ ஒரு அப்பட்டமான முட்டாள் என்று மட்டும் தெரிகிறது. விடுதலைப்புலிகளுக்கும் நீலகிரிக்கும் என்ன தொடர்பு? அதுவும் கலெக்டர் அலுவலகத்தையும், பாரத வங்கியையும் அவர்களோ அவர்களது ஆதரவாளர்களோ ஏன் தாக்க வேண்டும்? இதற்கு முன் விடுதலைப்புலிகளோ அவர்களது ஆதரவாளர்களோ முன்னறிவித்தல் செய்து விட்டு எங்கெனும் தாக்குதல் நடத்தி இருக்கிறார்களா?. இப்படிப்பட்ட செய்தியை பெயர் முகவரியோடு யாரேனும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்புவார்களா? இத்தனை வருடங்களாக புலிகள் செய்யாத செயலை ஏதோ ஒரு அனாமதேயத்திற்கு எதிராகசெய்ய முன் வருவார்களா? அல்லது யாருடைய மனதிலோ ஏற்பட்ட கிலிதான் புலியாகிவிட்டதா?

இப்படிப்பட்ட ஒரு செய்தியை அனாமதேயமாக வெளியிடுவதன் மூலம் 'இந்து' யாருடைய சுயநலனுக்கோ துணை போகிறதா? அல்லது ஏமாந்து விட்டதா?

நீலகிரியில் உள்ள தாயகம் திரும்பிய இந்தியர்களை இலங்கையர்கள் என்று கூறி பிரச்சாரப்படுத்துவதும் புலிகளை இவர்களோடு தொடர்பு படுத்தி அச்சுறுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி இதனால் அம்பலப்படுத்தப்படுகிறது.

என் சிந்தனை கலைந்தது. பஸ்ஸுக்கு வெளியே பறக்க முயன்ற 'இந்து' வை உள்ளே இழுத்து நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

---

**மன்றச் செய்திகள்**

## குன்னூரில் குதூகலப் பொங்கல்

குன்னூர் பழத்தோட்டத்தில் 16-1-92 அன்று பொங்கல்விழா குதூகலமாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு குன்னூர் பிராந்திய செயலாளர் திரு கே. சாந்தகிருஷ்ணன் தலைமை தாங்க, திருவாளர்கள் ஆறுமுகம், பிலிப், சக்திவேல், அண்ணாதுரை மற்றும் திருமதி பாக்கியலட்சுமி ஆகியோர் குத்து விளக்கேற்றித் தொடக்கி வைத்தனர்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அருவங்காடு காவல்துறை துணை ஆய்வாளர் திரு. இரா. ராமலிங்கம் விளையாட்டு வீரர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் விளையாட்டுப் போட்டிகளுடன் மன்றக் கலைக் குழுவினரின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. குன்னூர் கஜமூர்த்தி, ராஜா ஆகியோரின் சிறப்பு நடனமும் பூமிநாடகமும் மக்களைக் கவர்ந்தன.

விழா முடிவில் திரு. அண்ணாதுரை நன்றி கூறினார்.

# திடமான தீர்மானங்கள்

**ம.ம.ம. மன்றத்தின் 7-வது ஆண்டு மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன. தீர்மானங்கள் மக்களின் பலத்த வரவேற்போடு ஏகமனதாக நிறைவேறின.**

1. **ம**லையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தின் பொறுப்பாளர்கள் சிறைவைக்கப்பட்டது அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையை மீறிய செயல் ஆகும் என்பதால் அதனை கண்டிக்கிறோம்.

2. **நீ**லகிரி மாவட்டத்தில் தாயகம் திரும்பியோருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறை, வன்முறை ஆகியவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

3. **எ**ங்கள் மன்றம் இனவாதத்தை முற்றாக நிராகரிக்கும் ஒரு மனித உரிமை இயக்கம் என்பதை பகிரங்கமாக பிரகடனப்படுத்தும் அதேவேளை, இனவாதத்திற்குத் தூபமிடும் வகையில் ஓர் இனத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்வதும், அறிக்கைகள் வெளியிடுவதும், நீலகிரியில் எல்லா அசம்பாவிதங்களுக்கும் எவ்வித அடிப்படையும் இன்றி ஓர் இனத்தைச்சேர்ந்த ஏழைத் தொழிலாளர்களையே காரணம் காட்டுவதும் ஆகிய செயல்கள் கைவிடப்படவேண்டும்

4. **க**ர்நாடகா மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதில் மத்திய அரசு உடன் தலையிட்டு, அங்கு சமாதான சகஜ நிலை நிலவ நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு பாதிக்கப்பட்ட தமிழ்ச் சகோதரர்களுக்கு ஆதரவையும் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

5. **இ**ந்தியாவில் வேகமாகப் பரவிவரும் அரசியல் வன்முறைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதைத் தடுப்பதற்கு ஒரே வழி மக்கள் உரிமையை மதித்து நடப்பதாகும்.

6. **இ**ந்தியாவின் பல பகுதிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற வன்செயல்களை தீவிர நடவடிக்கைகள் மூலம் தடுத்து நிறுத்த வேண்டும். தலித் மக்களின் போராட்டங்களுக்கு உறுதுணையாக இருப்போம். அவர்களுக்கு எங்கள் தோழமையையும் ஒத்துழைப்பையும் வெளிப்படுத்திக் கொள்ளுகிறோம்.

7. **சு**ற்றுச் சூழல் நடவடிக்கைகள் மக்கள் நலன் சார்ந்ததாக அமைய வேண்டும். இந்த அடிப்படையில் கூடலூரில் உத்தேசிக்கப்பட்டுள்ள வனவிலங்கு பாதுகாப்பு வலயத்திட்டம் கைவிடப்படவேண்டும்.

8. **நி**லமற்ற மக்கள் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும். கோத்தகிரி மற்றும் ஊட்டி தாலுக்காக்களில் உள்ள அண்ணா நகர், கூக்கல்துரை அண்ணாநகர், அத்திக்கம்பை, கட்டபெட்டு போன்ற பகுதிகளுக்கு பட்டா கொடுப்பதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை வழங்கப்படாமல் காரணமின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவை உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

9. **கு**ன்னூர் அரையட்டி, பிக்கட்டி போன்ற இடங்களில் பலாத்காரமாக குடிசைகள் அகற்றப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதில் பாதிக்கப்பட்ட 380 குடும்பத்தினருக்கும் அளக்கரையில் சட்டவிரோதமான முறையில் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட 70 குடும்பத்தினருக்கும் மாற்று இடம் தந்து பட்டா வழங்கப்படவேண்டும்.

10. **த**மிழகத்தில் வாழ்கின்ற தாயகம் திரும்பிய இந்தியர்களுக்கு எதிராக, குறுகிய மனப்பான்மையில் பத்திரிகைகளிலும் அரசு அறிக்கைகளிலும் 'இலங்கைத் தமிழர்கள்' என தப்பாக வர்ணித்து அவர்களைப் புண்படுத்துவதாலும் இழிவுபடுத்துவதாலும் இப்போக்கு உடனடியாக கைவிடப்படவேண்டும்.

11. **அ**ரசு தேயிலைத் தோட்டங்களில் ஒரே குடும்பத்திலிருந்து 3 பேருக்கு வேலை வழங்கவேண்டும். வெளியிலிருந்து வேலைக்குச் செல்பவர்களை நிரந்தரமாக்கவேண்டும்.

12. **கூ**டலூர் வட்டத்தில் கைவச நிலங்களுக்கு (செக்சன் 14) பட்டா வழங்கப்பட வேண்டும். அத்தோடு, ஆமைக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள ஓட்டுப் பலகை தொழிற்சாலையை, தொழிற்பயிற்சி மையமாக்க வேண்டும்.

13. **ப**ல ஆண்டுகளுக்குப்பின், இந்தியாவில் வாழுகின்ற தாயகம் திரும்பிய இந்தியர்களை ஒருங்கிணைக்கும்வகையில், அவர்கள் உரிமைக்கு குரல் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் தாயகம் திரும்பியோர் தேசியப் பேரமைப்பை முழுமனதோடு வரவேற்கிறோம்.

இவை தவிர மேலும் 7 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## ● அனுமதி மறுப்பு ! கரும்புள்ளி எதிர்ப்பு ! ●

ம.ம.ம. மன்றத்தின் 7-வது ஆண்டு விழா ஜனவரி 4,5,6 ஆகிய மூன்று தினங்கள் நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இறுதி நாளான 6-ம் தேதி கோத்தகிரியில் பேரணியும் நேரு மைதானத்தில் பொதுக்கூட்டமும் நடத்த காவல் துறையினரிடம் **முன்கூட்டியே அனுமதி பெறப்பட்டிருந்தது.**

பேரணி மற்றும் பொதுக் கூட்டத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. குன்னூர், கூடலூர், ஊட்டி ஆகிய பகுதிகளில் பொது மக்கள் லாரிகளும் ஏற்பாடு செய்திருந்தனர். எனினும் இறுதி நேரத்தில் பேரணிக்கும் பொதுக் கூட்டத்திற்கும் ஏற்கனவே வழங்கியிருந்த அனுமதி ரத்து செய்யப்படுவதாக போலீசார் அறிவித்தனர்.

கடந்த ஆறு ஆண்டுகளாக நமது இயக்கம் நடத்தி வந்துள்ள ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களில் இப்போதுதான் முதன்முறையாக தடைவிதிப்பு நடைபெற்றுள்ளது. எனினும் மன்ற மண்டபத்தில் திட்டமிட்டபடி 7-வது ஆண்டுவிழா விமரிசையாக நடைபெற்றது. பொதுமக்கள் சிரமம் பாராமல் ஆதரவு கொடுத்தனர்.

இதுவரை நமது இயக்கம் பல பேரணிகளை நடத்தியுள்ளது. 10,000-க்கும் அதிகமான மக்கள் கொண்ட பேரணிகளையும் குறும்புத்தனம் கொண்ட குழந்தைகளின் பேரணிகளையும் நமது இயக்கம் சிறப்பான முறையில் நடத்தியுள்ளது.

இப்பேரணிகள் எல்லாம் சிறிதும் கட்டுப்பாடு குறையாமலும், சட்டம் ஒழுங்கிற்கு எவ்விதப் பிரச்சினை தராததாகவும், பொதுமக்களுக்கோ, போக்குவரத்திற்கோ இடையூறு இல்லாமலும் காவல் துறையினருக்கு சங்கடங்கள் ஏற்படுத்தாமலும் நடைபெற்று வந்துள்ளன. இது பற்றி போலீசாரே பகிரங்கமாகப் பாராட்டியுள்ளனர்.

அப்படியிருந்தும், இவ்வாண்டு மாத்திரம் அனுமதி ரத்தானதற்கு சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எங்கிருந்து முளைத்தது? இதற்கு ஆணையிட்ட மேலதிகாரி யார்? பேரணிக்கும் பொதுக் கூட்டத்துக்கும் தடைபோட்டதை 'மக்கள் மன்றம்' வன்மையாகக் கண்டிக்கிறது. நமது அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள இந்த அடிப்படை உரிமையை மறுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து இங்கே கரும்புள்ளிகளைத் தெளிக்கிறோம்.

கருத்துச் சுதந்திரத்தைக் காப்போம் !

பெருகும் ஆதரவு

## இலங்கை தொழிற்சங்கத் தலைவர் கடிதம்

இலங்கையின் முதுபெரும் தொழிற்சங்கத் தலைவரும் கம்யூனிஸ்டுக் கட்சியின் தீவிர உறுப்பினரும், தற்போது இலங்கையில் செயற்பட்டு வரும் தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியின் தலைவருமான திரு. எஸ். நடேசன் அவர்கள் ம.ம.ம. மன்றப் பொதுச் செயலருக்கு ஆதரவுக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். **நமது மன்றச் செய்திகள் இலங்கைப் பத்திரிக்கைகளில் வெளிவருவதை** மேற்கோள்காட்டி எழுதியுள்ள அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"தாயகம் திரும்பிய நமது தமிழ் மக்களுக்கு இந்தியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து நீங்கள் தீவிரமாகச் செயல்பட்டுவருவதை பத்திரிகைகளில் படித்து மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடைய பிரசுரங்களை எங்களுக்கு அனுப்பிவைப்பதோடு அங்குள்ள நிலைமைகள் குறித்து மேலதிகத் தகவல்களையும் தெரியப்படுத்தவும். உங்களுக்கு எந்தவிதத்தில் நாங்கள் உதவலாம் என்பதுபற்றி நாம் ஆலோசிப்போம்"

திரு. நடேசன் இலங்கையில் தேயிலைத் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்படுவதை எதிர்த்து பெரும் பணியாற்றி வருபவர். அவருடைய கடிதம் கடல் கடந்தும் நம்மக்கள் உரிமைக்கு ஆதரவு குரல் கிடைக்கும் என்பதற்கு சான்றாக உள்ளது.

எழுத்தாணி :

## காவிரியின் உரிமை

தமிழக மக்களின் நெஞ்சங்களில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ள காவிரிப் பிரச்சனையின் பல்வேறு அம்சங்களை மிகச் சுருக்கமாகக் கூறும் இச்சிறு நூல், ஏராளமான புள்ளிவிபரங்களை எடுத்துக்காட்டி காவிரியின் மீது தமிழகத்துக்குள்ள உரிமையை ஆதாரப்பூர்வமாக எடுத்துச் சொல்கிறது. பாமர மக்களுக்குப் புரியக்கூடிய தமிழில் காவிரிப் பிரச்சினையின் வரலாறு, ஒப்பந்தங்களின் விளக்கம், காவிரிக்கு மாற்றாகக் கூறப்படும் தீர்வுகள் மீதான விமர்சனம் என்ற வகையில் விரித்துச் சொல்லும் நூலாசிரியர், "அரசியலுக்கு அப்பாற்பட்டுத் தமிழர் அனைவரும் காவிரி நீரின் உரிமைக்குக் குரல்கொடுக்க ஓரணியில் திரளவேண்டும்" என்று அறைகூவல் விடுக்கிறார். சிறுநூலாயினும் பொருள் பொதிந்ததாய் 'கடுகு சிறிதெனினும் காரம் பெரிது' என்பதை இந்நூல் நிரூபிக்கிறது.

ஆசிரியர் : தமிழகன்

வெளியீடு : பாட்டாளிப் பதிப்பகம், திலிபன் நகர், அம்மாப்பாளையம், திருச்சி மாவட்டம், - 621 101

# நீலகிரியில் நவீன ஜாரிஸம்

**- விசித்திரமான புத்தாண்டு பொங்கல் பரிசுகள் -**

"இம்மென்றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசம்'' என்று ரஷ்யாவில் கொடுங்கோலாட்சி செய்த ஜார் மன்னனைப் பற்றி மகாகவி பாரதி பாடினார்.

இன்று நீலகிரி மாவட்டத்தில் இதேபோன்றதொரு நிலைமை நிலவுகிறது. இங்குள்ள உழைக்கும் மக்கள் மீதும் ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள் மீதும் தேவையற்ற அடக்கு முறைகளும் அநீதிகளும் இழைக்கப்படுகின்றன.

## புத்தாண்டுப் பரிசு

புது வருட தினத்தன்று மகிழ்ச்சியோடு இருந்தால் வருடம் முழுதும் மகிழ்ச்சியோடு வாழலாம், என்பது நமது மக்களின் நம்பிக்கை. ஆனால், ஊட்டியில் 92 ஜனவரி 1-ம் தேதி புதுவருட தினத்தன்று ஏழை மக்கள்மீது அர்த்தமற்ற அடக்குமுறை ஏவிவிடப்பட்டது.

ஊட்டி மஞ்சனக்கொரை கிராமத்தில் இருக்கும் சிலர் கன்னடியர் வீடுகளைத் தாக்கியதாக போலீசில் புகார் செய்யப்பட்டது. கர்நாடகத் தமிழர்கள் தாக்கப்பட்டதை எண்ணி தமிழ்நாடு முழுதும் கொந்தளிப்பும் ஆத்திரமும் நிலவிக் கொண்டிருந்த அச்சமயத்தில் மஞ்சனக்கொரை சம்பவத்தை மட்டும் மாவட்ட நிர்வாகம் சீரியசாகக் கருதியது. அதன் விளைவாக டிசம்பர் 31-ம் தேதி இரவு மஞ்சனக்கொரை, அன்பு அண்ணாநகர் ஆகிய ஊர்களிலுள்ள தமிழ் மக்கள் எவ்வித காரணமுமின்றி கைது செய்யப்பட்டார்கள். தமிழ் மக்களின் குடிசைகளில் மூன்றுக்கு தீ வைக்கப்பட்டது. 10 வீடுகள் மக்கள் முன்பாகவே சேதமாக்கப்பட்டன. பெண்கள் அடித்து உதைக்கப்பட்டனர்.

இந்தக் கொடுமையை மாவட்ட ஆட்சியரிடம் முறையிடுவதற்காக, மஞ்சனக்கொரை, அன்பு அண்ணாநகர் மக்கள் சுமார் 1000 பேர் திரண்டு, மனுநீதி கேட்பதற்காக புதுவருட தினத்தன்று காலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் இருந்தனர். இம்மக்களின் போராட்டத்துக்கு ஊட்டியில் இருந்த ஆட்டோ ஓட்டுனர்கள் உட்பட ஏராளமான உதகைவாசிகள் ஆதரவாக அணி திரண்டிருந்தனர். அனைத்துக் கட்சிக் கூட்டமும் நடைபெற்றது. அதன் விளைவாக கைது செய்யப்பட்டிருந்த 150 பேரில் 20 பேர் மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

உறவினர்களோடு உண்டு களித்து மகிழ்ந்திருக்க வேண்டிய புத்தாண்டு தினத்தன்று மஞ்சனக்கொரை, அன்பு அண்ணாநகர் மக்களோ உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். இவ்வாண்டு முழுதும் போராடத்தான் வேண்டியிருக்குமோ?

## முன்னெச்சரிக்கை கைது

கர்நாடகத்தில் தமிழர் தாக்கப்பட்டதைக் கண்டித்து தமிழக அரசும் எதிர்க்கட்சிகளும் இணைந்து கருத்துவேறுபாடு எதுவும் இல்லாமல் 'பந்த்' நடத்தப்பட்டது. வழக்கமாக இதுபோன்ற பந்த் நிலைமைகளில் சமூக விரோதிகள் மட்டுமே முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்படுவது உண்டு. ஆனால், நீலகிரியிலோ அப்பாவி பொதுமக்கள், ஏழைத்தொழிலாளர்கள் கொடூரமான முறையில் கைது செய்யப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதில் ஒரு முக்கிய விசயம் யாதெனில் முன்னெச்சரிக்கை கைது 'பந்த்' திற்கு முதல் நாள்தான் மேற்கொள்ளப்படும். ஆனால், நீலகிரியிலோ 'பந்த்' நடைபெற்றதற்கு அடுத்த நாள்தான் கைது படலம் நடைபெற்றது.

குன்னூர், ஊட்டி, கோத்தகிரி ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 950 பேர் சகட்டுமேனிக்குக் கைது செய்யப்பட்டார்கள். அரசு நடத்திய 'பந்த்'திற்கு ஆதரவாக அன்றையதினம் வேலைக்குச் செல்லவேண்டாமென்று தடுத்த சிலர் கூட கைது செய்து சிறைக்கு அனுப்பப்பட்டனர். இதில் மாவட்ட நிர்வாகம் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்வது அம்பலமானது. காரணம், தாயகம் திரும்பிய தமிழர்கள் மட்டுமே இவ்வாறு தேடித்தேடிக் கைதுசெய்யப்பட்டார்கள். தாயகம் திரும்பிய தமிழர்கள் மட்டுமே நீலகிரியின் சட்டஒழுங்குக்கு கெடுதல் விளைவிப்பவர்கள் என்பது போன்ற தோற்றத்தைக் கொடுப்பதற்காக மாவட்ட நிர்வாகம் இதுபோன்ற இனவாதமுடிவுகளை அமுல்படுத்தியிருக்கிறது.

முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்படுபவர்கள் சித்திரவதை செய்யப்படுவதும் வழக்கமில்லை. ஆனால், நீலகிரியில் அவ்வாறு சித்திரவதை செய்யப்பட்ட மக்கள் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட்டிடமே நேரில் புகார் கூறினர்.

உண்மையில், அமைதியாக புதுவருடத்தில் வாழ்க்கையைத் தொடங்கிய இம்மக்களிடையே இம்முன்னெச்சரிக்கை கைது நடவடிக்கைதான் பதற்றத்தை ஏற்படுத்தியது. நீலகிரியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை உருவாக்கப்படுகிறதேயன்றி, சாதாரணமாக உருவாகவில்லை.

## நீலகிரியில் நவீன ஜாரிஸம்

7-ம் பக்க தொடர்ச்சி

### பொங்கல் பரிசு :
### கொணவக்கரை கொடுமை

மஞ்சனக்கொரை மக்களுக்கு புத்தாண்டுப் பரிசு வழங்கியவர்கள் கொணவக்கரை மக்களுக்குப் பொங்கல் பரிசு வழங்கினார்கள்.

கோத்தகிரி கொணவக்கரை கிராமத்தில் இம்படா மட்டம் என்ற பகுதியிலுள்ள தனியார் தோட்டங்களில் அன்றாடக் கூலிகளாக கடந்த 15 வருடத்துக்கும் மேலாக உழைத்துவரும் சுமார் 75 குடும்பத்தினர் இம்படா மட்டம் கண்ணுவெட்டி என்ற இடத்திலுள்ள ஓடைப்புறம்போக்கு நிலமொன்றில் குடிசைகளைப் போட்டனர்.

இந்த வருடமாவது சொந்தக் குடிசையில் பால் பொங்குவோம் என்று கருதிய இம்மக்கள் 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கையோடு 'குளிரில் நிமிர்ந்த தம் குடிசைகளில்' வாழ்க்கையைத் தொடங்கினர்.

ஆனால் 17-1-91 அன்று அதிகாலை வனத்துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் உள்ளடங்கிய சுமார் 500 பேர் இம் மக்களின் குடிசைகளை பலவந்தமாக அகற்றினர். 75 பேர் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டு வனத்துறைச் சட்டங்களின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

இவர்களில் 35 பேர் ஆண்கள். 40 பேர் பெண்கள். இவர்கள் தவிர, 2 மாதம் முதல் 3 வயதுவரையிலான 10 பச்சிளம் பாலகர்களும் அனுப்பப்பட்டனர். பெண்களில் 4 பேர் கர்ப்பிணிகள். இவர்களில் ஒருவர் நிறைமாதக்கர்ப்பிணி. இவருக்கு சிறைக்குள் நுழைந்த அடுத்த கணமே ஒரு சின்னமலர் பிறந்தது. பெண் குழந்தையை ஈன்றெடுத்த இந்தத் தாய் பிரசவ வேதனை எற்பட்டிருப்பதை தெரிவித்தும் கூட கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்களில் 4 பேர் விதவைகள். 2 பேர் வயது முதிந்தோர். ஒரே குடும்பத்தினர் அனைவருமே கைதுசெய்யப்பட்டது10. பெற்றோர்கள் கைது செய்யப்பட வெளியில் வாழும் குழந்தைகளை அயலாரும் உறவினர்களும் பாதுகாத்து வருகின்றனர். இது தவிர, 15 வயதுக்கு உட்பட்ட மேலும் 15 பேரும் இளம் பெண்கள் மூவரும் கைது செய்யப்பட்டு, கோத்தகிரி வனத்துறை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தனர். மூன்று தினங்களின் பின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

தனியார் வீடுகளில் வாழும் இம்மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. இம்மக்களுக்கு மாற்று இடமும் மறுவாழ்வும் வழங்கவேண்டும் என்று ம.ம.ம. மன்றம் மாவட்ட ஆட்சியருக்கும் முதலமைச்சருக்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளது. இக் குடிசை அகற்றலைக் கண்டித்து தாயகம் திரும்பியோர் தேசியப் பேரவை மாவட்ட ஆட்சியருக்கு தந்தி அடித்துள்ளது.

---

**ஆந்திர அவலம்**

## சிறுமியை ஏலமிட்ட சிறுமைத்தனம் !

ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டத்திலுள்ள மர்ச்சகுண்டா கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு சிறுமி பகிரங்கமாக ஏலமிடப்பட்டு விற்கப்பட்ட கொடுமை நடந்துள்ளது. மிக அழகாக இருந்த இப்பெண்ணை அடைவதில் அவ்வூர்ப் பணக்காரர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஏலம் எடுத்துள்ளனர்.

அவளுடைய பெற்றோரின் ஏழ்மையைப் பயன்படுத்தியும், அவர்களைப் பயமுறுத்தியும் 1 ஏக்கர் நிலமும் 10,000 ரூபாய் பணமும் கொடுத்து அப்பெண்ணை பலவந்தமாக தேவதாசியாக்கி இருக்கிறார்கள். தேவதாசி சாதியைச் சேராத பெண்ணை தேவதாசி ஆக்கிவிட்டால் அவளின் இளமையையும் அழகையும் கொள்ளையடிக்கலாம் என்ற குரூர புத்தி காரணமாக, அப்பெண்ணுக்கு சிறப்புச் சடங்குகள் செய்து, ஊர்வலம் நடத்தி அதன்பின் ஏற்கெனவே உள்ள தேவதாசி ஒருத்தியிடம் பயிற்சி பெற அனுப்பி வைத்து அவள் அங்கீகரிக்கப்பட்ட தேவதாசி குலமாக மாற்றப்பட்டாள்.

உயர்ஜாதி பணக்காரர்கள் ஒரே ஒரு விசயத்தில் மட்டும் மிகவும் பரந்த மனதோடு ஜாதி வித்தியாசம் பார்ப்பதில்லை. அதுதான் அவர்களின் காம வெறி. அது சரி! இந்த அடிமையுகத்தின் அசிங்கத்தைக் கண்டும் அமைதியாக இருக்கும் நமது சட்டம் குற்றவாளியா? சமுதாயம் குற்றவாளியா?

---

### ஐ.நா வின் உலகளாவிய
### மனித உரிமைப் பிரகடனம்

"நாம் எல்லோரும் ஒரே குடும்பத்தை - மனித குடும்பத்தை - சேர்ந்தவர்கள். ஒவ்வொருவருக்கும் ஒரே விதமான அடிப்படை மற்றும் சம உரிமை உண்டு. இந்த உரிமைகள் மதிக்கப்பட ஒவ்வொருவருக்கும் தகுதியுண்டு. மேலும் மற்ற மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு.

இங்கு உரிமைகளை இனம், பாலினம், மொழி மற்றும் நிற வேற்றுமைகள் பாதிப்பதில்லை. ஏழ்மை, சமூகத்தோன்றல், அரசியல் கருத்துக்கள், மற்றும் மத நம்பிக்கைகள் போன்றவற்றில் உள்ள வேற்றுமைகளும் இதை மாற்றுவதில்லை. ஒவ்வொருவரும் அவர்கள் யாராகயிருந்தாலும் அவர்கள் எப்படி சிந்தித்தாலும், மனித உரிமைகளோடேயே பிறக்கிறார்கள்.

## தொங்கிய விரல்!

சமீபத்தில் மேட்டுப்பாளையத்திலிருந்து தனியார் பேருந்தில் நம்பியூர் சென்று கொண்டிருந்தேன். புஞ்சை புளியம்பட்டிக்கு முன் ஓர் ஊரில் பஸ் நின்றது. பயணிகள் அனைவரும் தூங்கிக் கொண்டிருந்தனர். 50 வயது மதிக்கத் தக்க ஒருவர் ஜன்னலில் கைவைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். பேருந்து ரிவர்சில் பின்னோக்கி நகர்த்தப்பட்டது. பக்கத்தில் ஒரு லாரியும் நின்றிருந்தது. பேருந்து பின்னோக்கி நகரும்போது ஜன்னலில் கைவைத்துத் தூங்கிகொண்டிருந்த அந்தமுதியவரின் கைலாரியில்அடிபட்டு அவரது ஆட்காட்டிவிரல் துண்டிக்கப்பட்டு லாரியில் மாட்டித் தொங்கியது. மற்ற விரல்களில் காயம், அந்த நபர் குடிபோதையில் இருந்த காரணத்தால் இதனை அதிகம் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார். புளியம்பட்டிவரை அவருக்கு எந்த உதவியும் செய்யாமல் அதன்பின் டீ, சாப்பாடு வாங்கிக்கொடுத்து அவரை அனுப்பிவிட்டனர்.

மது அருந்தினார் என்பதற்காகவோ, ஜன்னலில் கைவைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார் என்பதற்காகவோ அவரைப் புறக்கணிப்பது சரியா? இது மனிதாபிமானம்தானா? அவரது கைவிரல் லாரியில் தொங்குவதைப் பார்த்தும் கூட பேருந்தில் இருந்த ஒருவருமே இரக்கப்படவில்லை: அவருக்கு உடனடியாக சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்று யாருமே கவலைப்படவில்லை.

ஒருவருக்குமே இதயம் இல்லையே என்று நினைக்கும்போது வேதனையாக உள்ளது. கூடவே, தனது அங்கம் துண்டிக்கப்பட்டுத் தொங்குவதைக் கூட உணர்ந்து கொள்ள முடியாத அளவுக்கு பொது வண்டியில் போதையோடு வரும் நமது மக்களை எண்ணும்போது, கவலைப்படுவதா - ஆத்திரப்படுவதா? என்று தெரியவில்லை.

**- பி. சரஸ்வதி**

சின்னக் கரும்பாலம், குன்னூர்

## காந்திக்கு நேர்ந்த கதி !

குன்னூர் லெவல் கிராசிங் அருகில் இருக்கும் காந்தி சிலை 1944-ல் அமைக்கப்பட்டு புகழ்பெற்றது. அண்மையில் பஸ் போக்குவரத்தைக் காரணம்காட்டி இச்சிலையை அகற்றுவதற்கு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்தார்.

இதற்கு பொதுமக்களிடமிருந்து கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. குறிப்பாக காங்கிரஸ் கட்சி துடித்தெழுந்து எதிர்ப்பு காட்டியது. குன்னூர் பஸ் நிலையத்தில் இட நெருக்கடி ஏற்பட்டிப்பதும் அதனைத் தவிர்க்க வேண்டியதும் அவசியமானதே! அதற்காக நடவடிக்கை எடுக்கும் மாவட்ட ஆட்சியரைப் பாராட்டுகிறேன். ஆனால் அதற்கு காந்தியா பலியாக வேண்டும்? காந்தி சிலையை அகற்றாமலே மாற்று ஏற்பாடு செய்ய்முடியாதா? காந்தி சிலையை அகற்றக் கூடாது என்று போராடும் காங்கிரஸ் கட்சி அச்சிலையருகே ஒரு தட்டி எழுதிவைத்திருந்தது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது; ''வெள்ளையன் கலெக்டராக இருந்த நேரத்தில் என்னை மதித்து நான் சிலைவடிவாக குன்னூரின் மையத்தில் இருக்க அனுமதித்தான். நான் பெற்றுத் தந்த சுதந்திரம் காரணமாக இன்றைக்கு யாரானாலும் கலெக்டராகும் நிலை உருவாகியது. அந்தோ கொடுமை; ஆதியிலே வந்த நான் வீதியின் ஓரத்திலே: பாதியிலே வந்த கலெக்டரின் அதிகாரம் நடு வீதியிலே.''

## பொங்கு மனம்

நீலகிரியில் தாயகம் திரும்பிய மக்களை மட்டும் வெளியேறச் செய்யும் கொடுமைகள் தொடர்வதை எண்ணிய எனக்கு மேற்கண்ட வாசகம் சிந்தனையைத் தூண்டியது. ''காந்தியும் தாயகம் 'திரும்பியவரே'' என்ற ஒரு பெட்டிச் செய்தி மக்கள் மன்றம் ஐப்பசி 91 இதழில் வெளிவந்திருந்தது. காந்தியும் தாயகம் திரும்பியவர்தான் என்று நீங்கள் உரிமை பாராட்டி நிரூபித்த காரணத்தால்தான் அவர் சிலைக்கும் இக்கதி நேர்ந்ததோ!

எப்படியானாலும் காந்தி சிலையைக் காப்பதற்காக காங்கிரஸ் கட்சி நடத்தும் போராட்டத்தை ஆதரிப்போம்!

**- நீலமலை சிவமணியன் -**

## கர்நாடகத் தமிழருக்கு ஆதரவும் அனுதாபமும்

கர்நாடக மாநிலத்தில் தாக்கப்பட்டு, சொந்த மண்ணிலேயே அகதிகளாக வரும் தமிழ்மக்களுக்கு மன்றத்தின் தார்மீக ஆதரவை வெளிப்படுத்தும் தீர்மானம் மன்றஆண்டுவிழாவில் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் அக் கலவரங்களில் உயிரிழந்த தமிழ்ச் சகோதரர்களுக்கு அனுதாபம் தெரிவித்து இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

# மன்றச் செய்திகள்

## இஞ்சி பயிரிடும் சிறுவிவசாயிகள் சங்கம் உதயம்

கூடலூரில் இஞ்சி பயிரிடும் சிறுவிவசாயிகள் கூட்டமொன்று 27-1-92 அன்று நடைபெற்றது. கூட்டத்துக்கு மன்றப் பொதுச் செயலர் திரு. இர. சிவலிங்கம் தலைமை தாங்கினார். நூற்றுக்கணக்கான சிறு மற்றும் குறு விவசாயிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்

நிகழ்ச்சியில் கூடலூர் பிராந்திய செயலர் திரு. சந்திரசேகரன் வரவேற்புரை நிகழ்த்த, திரு. சத்தியசிலன் நன்றியுரை நவின்றார். நிகழ்ச்சி முடிவில் இஞ்சி பயிரிடும் சிறுவிவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டு அதன் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | - திரு. ஆர். சத்தியசீலன் |
| துணைத் தலைவர் | - திரு. சுப்பிரமணியம் |
| | - திருமதி. மகேஸ்வரி சுப்பையா |
| செயலர் | - திரு. எஸ். கந்தையா |
| துணைச் செயலர் | - திரு. ஏ. ராஜபாலன் |
| பொருளாளர் | - திரு. எம். நடராஜ் |
| து. பொருளாளர் | - திரு. ஆர். ராஜு |

மேலும், திருவாளர்கள் சிங்கராஜ், பெரியசாமி, சிவராமன். சண்முகம் மற்றும் திருமதி நடராஜம்மாள் ஆகியோர் உள்ளடக்கிய உறுப்பினர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## மாதர் முன்னணிக் கூட்டங்கள்

மலையக மாதர் முன்னணியின் கூடலூர் கிளை 26.1-92 அன்று இரும்புப்பாலம் அரசு தேயிலைத் தோட்டத்தில் கூட்டம் நடத்தியது. பிராந்திய செயலர் திரு. சந்திரசேகரன், எஸ். செல்வராஜ், மாதர் முன்னணியின் கூடலூர் செயலாளர் திருமதி. ரோஸ் மேரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

27.1-92 அன்று மன்ற அலுவலகத்தில் மலையக மாதர் முன்னணியின் பிராந்தியப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் 50-க்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாதர் அணியின் முன்னேற்றம்; அதற்குரிய வழிமுறைகள், சர்வதேசிய பெண்கள் தினக் கொண்டாட்டம் போன்ற பல விசயங்கள் அலசி ஆராயப்பட்டன.

## சிலவரியில் பல பணிகள்

★ ஜனவரி 25,26 ஆகிய இரு தினங்கள் குன்னூரில் தொண்டரணிப் பயிற்சி நடைபெற்றது.

★ கோத்தகிரி பாண்டிய நகரில் சுகாதாரக்குழு விஜயம் செய்து பணிகளைப் பார்வையிட்டது. அச் சமயம் சிறுவர் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

ஈரடி முன்னால்

# மூன்றாம் ஆண்டில் 'மக்கள் மன்றம்'

நீலகிரியிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை முழக்க ஏடான 'மக்கள் மன்றம்' இரண்டு ஆண்டுகள் கடந்து மூன்றாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. ''ஏழை சொல் அம்பலமேறாது என்பது நம் நாட்டுவழக்கு. ஏழையின் சொல்லை, ஏக்கத்தை, குமுறலை, அச்சேற்றி அம்பலமேறச் செய்யவேண்டும் என்ற உறுதியில் உதித்தது மக்கள் மன்றம் உங்கள் கையில் தவழ்வது ஓர் ஏழையின் ஏடு'' என்ற பிரகடனத்தோடு பிறப்பெடுத்த மக்கள் மன்றம் இது வரை பதினாறு இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நீலகிரியில் குமுறும் ஏழைமக்களின், சுரண்டப்படும்உழைப்பாளிகளின் உள்ளத்தை வெளிப்படுத்துவதற்கு 'மக்கள் மன்றத்தை' விட்டால் வேறுஏடில்லை அதன் காரணமாக 'மக்கள் மன்றத்தின் மீது களங்கம் கற்பிக்கவும் பல்வேறு வதந்திகள் பரப்பவும் முதலாளிகளும் அவர்களுக்குத் துணைபோகும் அதிகாரவர்க்கமும் முனைந்து வருகின்றன. ஆயினும் வாசகர்கள் தரும் பேராதரவு' நீலகிரிக்கு அப்பால் இருந்தும் வரும் ஆதரவுக் கடிதங்கள் நீலகிரிக் குளிரைவிடப் பன்மடங்கு குளிர்ச்சியை, மலர்ச்சியை மனதில் ஏற்படுத்துகின்றன'

நீலகிரிச் சாரலிலே, சிறை அனுபவங்கள், மன்றச் செய்திகள், பொங்கு மனம், மக்கள் கலைஞர்கள், மணக்கும் மழலை ஆகிய தொடர் அம்சங்களைக் கொண்டதாய் இன்று வெளிவரும் மக்கள் மன்றம் பலதுறைகளிலும் சிறப்புக் கட்டுரைகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் நீலகிரி மாவட்ட செய்திகளையும் அவ்வப்போது தாங்கி வருகின்றது.

எதிர்காலத்தில் 'மக்கள் மன்றம்' மாபெரும் எழுத்து வேலாக உயர்ந்து, உழைக்கும் மக்களின் போர்வாளாக இருக்கும். வாசகர்களின் ஆதரவு தொடர்ந்து தேவை.

வாசகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு -

# 'பெல்ட் ஏரியா': கைவிடுக! சென்னை மாநாட்டில் தீர்மானம்

சென்னை ஆஷா நிவாஸில் கிராமப்புறத் தொழிலாளர்கள் தொடர்பான நான்கு நாள் கருத்தரங்கம் ஒன்று பிப்ரவரி 5,6,7,8 ஆகிய தினங்களில் நடைபெற்றது. தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலுமிருந்து பல்வேறு இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கினை செங்கல்பட்டில் செயல்பட்டுவரும் 'சமூக செயல்பாட்டுக்கான சட்ட ஆதார மையம்' ஏற்பாடு செய்திருந்தது.

கருத்தரங்க முடிவில் கிராமப்புற விவசாயிகள் தொடர்பான 26 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் நீலகிரி மாவட்டம் கூடலூரில் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள 'பெல்ட் ஏரியா' திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

மேலும், கோவை ஆனைக்கட்டி மலையில் அமைக்கப்படவுள்ள சுற்றுலாத்திட்டம் அங்குள்ள பழங்குடியினரைப் பாதிப்பதால் அதனை கைவிட வேண்டும் என்றும், நீலகிரி மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அரசு நிலங்களையும் பொது ஆதார வளங்களையும் நிலவுடமையாளர்கள் ஆக்கிரமித்திருப்பதால் புதிதாக நில அளவை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அரசு நிலங்களில் நிலமற்ற கூலித் தொழிலாளர்கள் குடியேறும் போது அவர்களின் குடிசைகள் பலவந்தமாக அகற்றப்படக் கூடாது. தவிர்க்க முடியாதவாறு அவ்வாறு அகற்றப்படநேருமாயின் மாற்று இடம் தரவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் தமிழகத்தின் நான்கு மாவட்டங்களில் மராட்டிய மாநிலத்தை அடியொட்டி, வேலை உத்தரவாதத் திட்டம் அமுலாக்குவதற்கு தமிழக அரசு மேற்கொண்டுள்ள முடிவைப் பாராட்டி இக்கருத்தரங்கம் தீர்மானம் நிறைவேற்றியது.

# சர்வதேச மகளிர் தினம்

**பொதுக் கூட்டம் மகளிர் பேரணி**

8 - 3 - 92 ஞாயிற்றுக்கிழமை கூடலூரில், நடைபெறும்

'' மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்! ''

**அனைவரும் திரண்டு வருக !**

- மலையக மாதர் முன்னணி -

## 1992-ம் ஆண்டிற்கான மன்ற புதிய நிர்வாக சபை

காப்பாளர் : அருட்திரு. ஆர். குட்டின்ஹா.

தலைவர் : திரு. எஸ். திருச்செந்தூரன்

துணைத் தலைவர் : திரு. ஏ.சி. தீன்

பொதுச் செயலர் : இர. சிவலிங்கம்

துணைச் செயலர் : திரு. எல். ஸ்ரீஸ்கந்தராஜா

பொருளாளர் : திரு. எம். சந்திரசேகரன்

துணைப் பொருளாளர் : திரு. யு. கிரிபளானி

உறுப்பினர்கள் :

கோத்தகிரி : திரு. கண்ணையா
திரு. இஸ்மாயில்
திருமதி. கணேசம்மா
திருமதி. கிருஷ்ணலீலா

குன்னூர் : திரு. வரதராஜ்
திரு. அண்ணாதுரை

கூடலூர் : திரு. சத்தியசீலன்
திரு. வடிவேல்
திரு. கந்தையா

ஊட்டி : திரு. செல்வமணி
திரு. கணபதி
திரு. ராமகிருஷ்ணன்

*கவிபொழில்*

# எரியக் காத்திருக்கும் எரிமலைகள்

**- அ. சிவமணியன்**

மலையகத்தின் சுவடுகளே!
மண்ணின் முகடுகளே!
அகதி எனக் கேட்டு
அடங்கி வாழ்ந்திட்ட
அடிமை உணர்வுகள் - இனி
அழிந்து போகட்டும்.

நாடுமின்றி வீடுமின்றி
காடுமின்றி வாடும் நீ ஏன்
காட்டாற்று வெள்ளமாகக்கூடாது
உன்னில் தேக்கி வைத்துச்
சிறையிட்டிருக்கும்
உரிமை உணர்வுகள்
உயர்ந்து விட்டன,

உறவோடு பிறந்திங்கு
உணர்வோடு வந்த நம்மை
- ஒரு செடியின் மலர்களை
அகதி என்றழைப்போர் . நம்
உடல் பொருள் ஆவி
அத்தனைக்கும் சிறையிடலாம்
உணர்வுக்கு இயலுமா?

அவர்கள்,
அகதி என்றழைத்தபோது
ஆனந்தப்பட்டேன்
ஆம்! அவர்கள்
அழியப் போவதை எண்ணி

உரிமையைச் சிறைவைக்க
உத்தரவிடுகின்ற
அடிமட்ட அதிகாரிகளை

நடுரோட்டில் ஓடவிட்டு
குஷ்டரோகியை வைத்து
செருப்படி நடத்த வேண்டும்.

நம்மைச் சிறை வைத்தவர்கள்
துயிலச் சென்ற நமது
உணர்வுகளை உசுப்பிவிட்டு
வீரநடை போட
சொல்லிக் கொடுத்தார்கள்.

தூண்டப்படாத
சுடர் விளக்குகளே!
வருங்கால வசந்தங்களை
வாழுகின்ற நிலைமைகளை
தேக்கிவைத்து,
அடிமைச் சிறையினின்று
சிந்தையை
விடுதலைச் செய்யுங்கள்.

நம், நெஞ்சு ரத்தங்களை
சிறைப்படுத்திய அந்த
நயவஞ்சகக் கரங்களை
எச்சரிக்கிறேன்.

உங்களுக்காக எங்கள்
உணர்வு எரிமலைகள்
எரியக் காத்திருக்கின்றன,

அதனால்,
சிறைக்கம்பிகள் கூட
இனி,
சங்கீதம் பாடும்.

**மணக்கும் மழலை**

## வாசிப்பு பழக்கம்

சிறுவர்களாகிய நாம் ஓய்வு நேரத்தை பிரயோசனமான வழியில் செலவழிக்க வேண்டும். பயனுள்ள பொழுது போக்குகள் ஏதாவது ஒன்றை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நல்ல புத்தகங்கள் படிப்பதும் ஒரு சிறந்த பழக்கமாகும். இப்பழக்கத்தை நாம் அன்றாடம் மேற்கொண்டால் நமது வாழ்நாள் முழுக்க பயன் தரும். நல்ல புத்தகங்கள் நமக்கு ஒரு நல்ல ஆசிரியராகவும் நல்ல நண்பனாகவும் இருக்கும். உலகில் அறிவாளிகளாக இருந்த எல்லோரிடமும் வாசிப்புப் பழக்கம் இளமையிலேயே இருந்தது. எனவே சிறுவர்கள் நாமும் வாசிப்புப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

- செல்வி சுகாசினி -
6-ம் வகுப்பு அவிலா கான்வெண்ட் கோவை

# ஒலியலைகள்

நமது தேசிய அமைப்பில் நாம் அனைவரும் இணைந்து நம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். கொணவக்கரை கொடுமையை அறிந்து துடித்தோம். கண்டனத்தை குடிதழுவலும் தந்திமூலம் ஊட்டி கலெக்டருக்கு வெளிப்படுத்தியுள்ளோம் 'மக்கள் மன்றம்' பிரதிகள் தொடர்ந்து அனுப்பவும்.

- சக்திவேல்,
தாயகம் திரும்பிய மக்கள் நலப் பாதுகாப்புச் சங்கம்,
கொடைக்கானல்

'மக்கள் மன்றம்' படிக்க மிக ஆவல் கொண்டுள்ளேன். தவறாமல் எனக்கு அனுப்பிவைக்கவும்.

- ஜாகீர் உசேன் -
மதுரை - 1

நீலகிரியில் இருந்து மக்களை ஒடுக்கும் மதோன்மத்தர்களை மாற்றியே ஆகவேண்டும் என்ற உங்களின் புத்தாண்டு உறுதிமொழியை முழுமனதோடு ஆதரிக்கிறோம்.

- நாராயணன் -
தராசு மக்கள் மன்றம்,
கோத்தகிரி

மார்கழி இதழ் சூடாக இருந்தது. கலெக்டர் பற்றிய செய்தி அதிர்ச்சி அளித்தது. பொதுவாக நன்றாகவும் பயனுள்ளதாகவும் இருந்த இதழில் ஒரு குறை பக்கங்கள் போதாது. அதிகப்படுத்தி செய்தி அளித்தால் பயன் பெருகும்.

- பி. அமிர்தா -
கோவை - 45

நீலகிரியில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை 'மக்கள் மன்றம்' ஒன்றுதான் நன்கு வெளிப்படுத்துகிறது. செய்திகள் பயனுள்ளவையாகும்.

- பாலசுப்பிரமணி -
அரசு கலைக்கல்லூரி, கோவை.

வெளியீடு : மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம், இல 187, இராஜா அண்ணாமலைத் தெரு,
தபால் பெட்டி எண். 2758 கோவை - 641 001. (தனிச்சுற்றுக்கு மட்டும்)